வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 12.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

ஜார்கண்டில் 43 தொகுதிகளுக்கு, முதல் கட்டமாக நாளை நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் கனவை நனவாக்க, கல்வி மட்டுமே ஒரே வழி என்று, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார்.

நாட்டின் பொது துறை வங்கிகள், நடப்பு நிதியாண்டின் முதல் 6 மாதங்களில் 11 சதவிகித அளவிற்கு. வலுவான வளர்ச்சி கண்டுள்ளன.

புதுச்சேரி அரசின் கலை பண்பாட்டுத் துறை, கம்பன் புகழ் இலக்கிய விருது உள்ளிட்ட விருதுகளுக்கான விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது.

ஜார்கண்ட்

ஜார்கண்டில் 43 தொகுதிகளுக்கு, முதல் கட்டமாக நாளை நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப் பட்டுள்ளன. இத்தொகுதிகளில் மொத்தம் சுமார் 1 கோடியே 37

லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக, சுமார் 15 ஆயிரம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. நாளைய முதல் கட்ட சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவில், 73 பெண்கள் உட்பட 683 வேட்பாளர்களின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்பட உள்ளது.

இதற்கிடையே, ஜார்கண்ட் மாநிலத்தில், 2-ஆவது மற்றும் இறுதி கட்டமாக 38 தொகுதிகளிலும், மகாராஷ்டிர மாநிலத்தில் அனைத்து 288 தொகுதிகளில் ஒரே கட்டமாகவும், வரும் 20-ஆம் தேதி நடைபெற உள்ள, சட்டமன்ற தேர்தலுக்கான, தேர்தல் பிரச்சாரம், தீவிரமாக நடைபெற்று வருகிறது. பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மகாராஷ்டிர மாநிலம் சந்திரபூர் பகுதியில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில், வீட்டு வசதி, டிஜிட்டல் கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு பல்கலைக் கழகம் உட்பட, பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள திட்டங்களால், மாநிலத்தின் எதிர்காலம் மேலும் சிறக்கும் என்றார். பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று சோலாப்பூர், புனே ஆகிய இடங்களிலும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்கிறார்.

*மோடி-வாழ்த்து*

பில்லியர்ட்ஸ் விளையாட்டில் உலக சாம்பியன் பட்டம் வென்றுள்ள இந்திய வீரர் பங்கஜ் அத்வானிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். பங்கஜ் அத்வானியின் உறுதிப்பாடும் அர்ப்பணிப்பு உணர்வும் பாராட்டத் தக்கவை என்றும், அவரது இந்த வெற்றி வளர்ந்து

வரும் விளையாட்டு வீரர்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்றும் பிரதமர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார்.

*ஜெய்சங்கர்*

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் புவனேஸ்வரில் நடைபெற உள்ள, வெளிநாடு வாழ் இந்தியர் தின விழாவிற்கான அதிகாரப்பூர்வ இணைய தளத்தை, இன்று மாலை புதுடெல்லியில், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தொடக்கி வைக்கிறார். 1915-ஆம் ஆண்டு, மகாத்மாகாந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியா திரும்பிய நாளான ஜனவரி 9-ஆம் தேதி, ஆண்டுதோறும், வெளிநாடு வாழ் இந்தியர் தினமாக கொண்டாடப்படுகிறது. தாய்நாட்டின் வளர்ச்சிக்கு வெளிநாடு வாழ் இந்தியர்கள் ஆற்றி வரும் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இவ்விழா அமைவதும் குறிப்பிடத் தக்கது.

*கல்வி*

2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் கனவை நனவாக்க, கல்வி மட்டுமே ஒரே வழி என்று, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் அனைத்து மாநில உயர்கல்வி மற்றும் தொழில் நுட்ப கல்வித் துறை செயலர்களுக்கான, தேசியப் பயிலரங்கில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். கல்வித் துறையில், உள்கட்டமைப்பு, பாடத் திட்டம், ஆராய்ச்சி, தலைமைத் துவம் உள்ளிட்ட முக்கிய அம்சங்களை

பெரிய அளவில் மேம்படுத்த தேவை இருப்பதாக அமைச்சர் கூறினார். உயர்கல்வித் துறையில், கிரெடிட் முறை, நுழைவுத் தேர்வு மூலமான மாணவர் சேர்க்கை, தேசிய ஆராய்ச்சி நிறுவனம் போன்ற, புரட்சிகரமான பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். கல்வி நிறுவனங்களின் பாடத் திட்டத்தில், முன்பு இணை அம்சங்களாக மட்டுமே கருதப்பட்ட, விளையாட்டு, கவிதை, நாடகம் போன்ற செயல்பாடுகள், தற்போது, புதிய பாடத் திட்டத்தின் கீழ், தொழில்முறைப் படிப்புகளாக மாறி இருப்பதாக அவர் தெரிவித்தார். தேசிய கல்விக் கொள்கையை தத்தம் மாநிலங்களில் அமல்படுத்தவும் அந்தந்த மாநிலங்களின் சிறப்பு தேவைகளுக்கு ஏற்ப பாடத் திட்டத்தில் மாற்றம் கொண்டு வரவும், பயிலரங்கில் பங்கேற்கும் மாநில அரசுப் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென திரு தர்மேந்திர பிரதான் கேட்டுக் கொண்டார். மத்திய கல்வித் துறை இணை அமைச்சர் திரு சுகாந்த் மஜூம்தார் உள்ளிட்டோர், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*எத்தனால்*

உயிரி எரிபொருள் கலந்த எரிபொருள் விற்பனையால், நாட்டின் எரிபொருள் இறக்கமதி செலவு, ஆண்டுக்கு 91 ஆயிரம் கோடி ஒரூபாய் குறைவதுடன் வேளாண்மை துறையும் பயன் பெறும் என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறி உள்ளார். இன்று பெங்களுரில், எரிசக்தி தொழில் நுட்பங்கள் பற்றிய 27-ஆவது உச்சி

மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசிய அவர் உயிரி எரிபொருள் கலந்த எரிபொருள் பயன்பாட்டில், இந்தியா உலகிலேயே, 2-ஆவது இடம் வகிப்பதாகவும், பெட்ரோலுடன் கலக்கப்படும் உயிரி எரிபொருளின் அளவை 20 சதவிகிதமாக உயர்த்தும் இலக்கு, திட்டமிட்ட காலத்திற்கு முன்பாக, அடுத்த ஆண்டிலேயே எட்டப்படும் என்றும் கூறினார். இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் பசுமை எரிசக்திக்கு மாறி வரும் நிலையில், நாடு, பசுமை ஹைட்ரஜன் இலுக்குகளை நோக்கி முன்னேறி வருவதாக அமைச்சர் தெரிவித்தார். இந்தியாவின் எரிசக்தி தேவை, 2047-ஆம் ஆண்டிற்குள், இரண்டரை மடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் எரிசக்தி பாதுகாப்பு தொடர்பான முயற்சிகளை இரட்டிப்பாக்குதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். உயர்நிலை தொழில் நுட்பங்களுக்கான மையமும், இண்டியன் ஆயில் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த 3 நாள் எரிசக்தி மாநாட்டில் சுமார் ஆயிரத்து 200 பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். எரிசக்தி தொழில் நுட்பம் தொடர்பான சுமார் 60 ஆய்வுக் கட்டுரைகள், இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுகின்றன. 23 நிறுவனங்கள் தங்களின் நவீன தொழில் நுட்பங்களை இம்மாநாட்டில் காட்சிப்படுத்தி உள்ளன. மாநாட்டின் தொடக்க விழாவில், எரிசக்தி திறனை மேம்படுத்தும் சிறந்த தொழில் நுட்பங்களுக்கான விருதுகளையும், அமைச்சர் வழங்கி சிறப்பித்தார்.

*பொது துறை வங்கி*

நாட்டின் பொது துறை வங்கிகள், நடப்பு நிதியாண்டின் முதல் 6 மாதங்களில் 11 சதவிகித அளவிற்கு. வலுவான வளர்ச்சி கண்டுள்ளன. இந்த 6 மாதங்களில் பொது துறை வங்கிகளின் மொத்த வர்த்தகம் 236 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. வங்கிகளால் திரட்டப்படும் நிரந்தர வைப்பு நிதியின் அளவு 9.5 சதவிகிதமாகவும், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்களின் அளவு 12.9 சதவிகிதமாகவும் அதிகரித்துள்ளது. செயற்கை நுண்ணறிவு, பிளாக் செயின் உள்ளிட்ட நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாட்டிலும், பொதுத் துறை வங்கிகள் கணிசமான முன்னேற்றம் காட்டி இருப்பதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*காப்புரிமை*

காப்புரிமை, தொழில்சார் வடிவமைப்பு, மற்றும் வணிக முத்திரைக்கு அதிக அளவில் விண்ணப்பிக்கும் முதல் 10 நாடுகளில் ஒன்றாக இந்தியா மேம்பட்டுள்ளது. உலக அளவிலான அறிவுசார் சொத்துரிமைக் குறியீடுகள் பற்றிய 2024-ஆம் ஆண்டு அறிக்கையில், இவ்வாறு தெரிய வந்துள்ளது. காப்புரிமை துறையில் மொத்தம் சுமார் 64 ஆயிரத்து 500 விண்ணப்பங்களுடன் இந்தியா உலக அளவில் 6-ஆவது இடம் பிடித்திருப்பதாகவும், இது உலக அளவிலான மொத்த எண்ணிக்கையில் பாதியை விட அதிகம் என்றும் மத்திய-தொழில் வர்த்தக அமைச்சகம்

தெரிவித்துள்ளது. இந்தியாவில் 2023-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காப்புரிமைகளின் எண்ணிக்கை, அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், சுமார் 150 சதவிகிதம் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில்சார் வடிவமைப்புகளுக்கு அங்கீகாரம் பெறுவது தொடர்பாக, இந்தியாவின் ஜவுளி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருந்து பெறப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையும், 36.4 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

*சோலார்-செல்*

சூரிய சக்தியில் இருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான இந்தியாவின் சோலார் செல் உற்பத்தி, கடந்த 2 ஆண்டுகளில், 2 பில்லியன் டாலராக, 23 மடங்கு அதிகரித்து உள்ளது. சோலார் இறக்குமதி நாடு என்ற நிலையில் இருந்து ஏற்றுமதி நாடு என்ற நிலைக்கு உயர்வதற்கான இந்தியாவின் முயற்சிகளில் இது முக்கிய மைல் கல் என்று, எரிசக்தி பொருளாதாரம் மற்றும் நிதி பகுப்பாய்வுக் கழகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சோலார் செல் போன்ற தயாரிப்புகளை வாங்க சீனாவை மட்டுமே நம்பியிராமல் வேறு நாடுகளிலும் வாய்ப்புகளை தேடுவதற்கான, வளர்ந்த நாடுகளில் சீனா பிளஸ் ஒன் உத்தியும், இதனால் இந்திய சோலார் செல் உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதி சந்தையில் நல்ல விலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டதுமே, சோலார் செல் உற்பத்தி அதிகரிக்க, முக்கிய காரணம் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் சோலார் செல்-களை அமெரிக்கா அதிக அளவில் வாங்குவதும், இந்தியாவின் சோலார் செல் ஏற்றுமதியில், அமெரிக்காவின் பங்கு 97 சதவிகிதம் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*கலை-பண்பாடு*

புதுச்சேரி அரசின் கலை பண்பாட்டுத் துறை, 2023-ஆம் ஆண்டிற்கான கம்பன் புகழ் இலக்கிய விருது, நேரு குழந்தைகள் இலக்கிய விருது, மற்றும், தொல்காப்பியர் விருதுக்கான விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. கடந்த ஆண்டில் வெளியிடப்பட்ட இலக்கிய நூல்கள், குழந்தை இலக்கிய நூல்கள் மற்றும் ஆராய்ச்சி நூல்களை எழுதிய புதுச்சேரியை சேர்ந்த எழுத்தாளர்கள், வரும் 25-ஆம் தேதிக்குள் நேரிலோ அல்லது இணைய தளம் மூலமாகவோ விண்ணப்பிலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருதுகள் ஒவ்வொன்றுக்கும், 10 ஆயிரம் ரூபாய் பண முடிப்பும், சான்றிதழும் வழங்கப்படும்.

*குலோத்துங்கன்*

புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் இன்று, லாஸ்பேட் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேரடி ஆய்வு மேற்கொண்டார். வெளிப்புற சிகிச்சை உள்ளிட்ட பிரிவுகளில் நோயாளிகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்களை அவர் கேட்டறிந்தார். தொடர்ந்து, புகையிலைப் பழக்கத்தை நிறுத்துவதற்கான சிகிச்சைப் பிரிவை மாவட்ட ஆட்சியர் தொடக்கி

வைத்தார். சுகாதாரத் துறை இயக்குநர் திரு செவ்வேல் மற்றும் இதர அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி-பழங்குடி*

புதுச்சேரியில் ஏம்பலம் தொகுதிக்கு உட்பட்ட கோர்க்காடு ஏரிக்கரையில் பல ஆண்டுகளாக வசித்து வரும் இருளர் பழங்குடி மக்கள் இலவச மனைப்பட்டா வழங்க கோரி, வயல் வெளியில் தாங்கள் பிடிக்கும் எலிகளை கையில் பிடித்தபடி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பழங்குடியினர் விடுதலை இயக்கத்தின் மாநில செயலர் திரு ஏகாம்பரம் இதற்கு தலைமை ஏற்றார். புதுச்சேரி அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து இலவச மனைப்பட்டா வழங்காவிட்டால் அடுத்த கட்டமாக மாநில அளவில் மாபெரும் போராட்டங்கள் நடத்தப்படும் என இருளர் பழங்குடி மக்கள் கூறினர்.

*வானிலை*

இன்று தென்மேற்கு வங்க கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் கடலோர தமிழகத்தின் அநேக இடங்களிலும், உள்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், மற்றும், புதுச்சேரி,காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சை, நாகை, திருவாரூர், விழுப்புரம்,

கடலூர் உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், ஓரிரு இடங்களில் கனமழைக்கும், சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளுர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக கடலோர பகுதிகள், தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகள், தென்மேற்கு வங்க கடல் மற்றும் மத்திய மேற்க வங்க கடல் பகுதிகளில், அதிகபட்சம் மணிக்கு 55 கிலோமீட்டர் வரையிலான வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, சென்னை பெருங்குடி மண்டலத்தில் 8 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*மீனவர் கைது*

நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டைப் பகுதியைச் சேர்ந்த 12 தமிழக மீனவர்களை, இலங்கை கடற்படையினர் இன்று அதிகாலை நடுக்கடலில் கைது செய்து, படகு ஒன்றையும் பறித்துச் சென்றுள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் மேல் விசாரணைக்காக இலங்கையின் மயிலிட்டி துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

*கால் டிராப்*

தொலைபேசி மற்றும் மொபைல் தொலைபேசி அழைப்புகள் அவ்வப்போது தானாகவே துண்டிக்கப்படும் பிரச்சனைக்கு தீர்வு காண மத்திய தொலை தொடர்பு அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, தொலை தொடர்பு சேவை நிறுவனங்களின் சேவைத் தரம், வருடம் 4 முறைக்கு பதிலாக, தற்போது, மாதந்தோறும் கண்காணிக்கப்படுவதாக அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தொலைதொடர்பு கட்டமைப்பில் தரவுத் துணுக்குகள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்தை அடைவதற்கான நேரம் குறித்த, தொலை தொடர்பு சேவை நிறுவனங்களின் லேட்டன்சி வரைமுறைகள், சர்வதேச அளவிற்கு இணையாக அமைவதை அரசு உறுதிப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொலைநிலை விற்பனையாளர்களிடம் இருந்து வரும் தேவையற்ற தொலைபேசி அழைப்புகளை கட்டுப்படுத்தும் வகையில் டிஜிட்டல் புலனாய்வு பிரிவு அமைக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

ஜார்கண்டில் 43 தொகுதிகளுக்கு, முதல் கட்டமாக நாளை நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் கனவை நனவாக்க, கல்வி மட்டுமே ஒரே வழி என்று, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார்.

நாட்டின் பொது துறை வங்கிகள், நடப்பு நிதியாண்டின் முதல் 6 மாதங்களில் 11 சதவிகித அளவிற்கு. வலுவான வளர்ச்சி கண்டுள்ளன.

புதுச்சேரி அரசின் கலை பண்பாட்டுத் துறை, கம்பன் புகழ் இலக்கிய விருது உள்ளிட்ட விருதுகளுக்கான விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 12.11.2024/Script/.

-----------------------------